**செ. கு. எண்**: 083 **நாள்**: 12.05.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.5.2014

விழுப்புரம் ரயில் நிலைய நடைமேடைகளில் புத்தகங்கள் மற்றும் செய்தி தாள்களை விற்பனை செய்து வந்த கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், கவுண்டனூரைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் R.ஜெயவேலு, 7.5.2014 அன்று திரு. அசாரியா என்பவரின் பொருளுடமைகளை அபகரித்தது தொடர்பாக காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். அப்போது அவருக்கு மயக்கம் மற்றும் நெஞ்சுவலி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து இவர் உயிரிழந்து விட்டார் என்ற செய்தியினை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஜெயவேலுவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த ஜெயவேலுவின் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இச்சம்பவம் தொடர்பாக விழுப்புரம் ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நான்கு காவலர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், இது குறித்து குற்றவியல் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இவ்விசாரணை முடிவின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**